**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.75/2024**

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 –ம் நாள் வாதிகள் தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேந்திரன் (PW–1 ) | வயது | : | 65 /2025 |
| த/க பெயர் | : | திரு. கோவிந்தசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | காரக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் வேண்டி இந்த தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் வேண்டும் என்று பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி எனக்கு உறவு முறை என்றால் எனது மருமகள். பிரதிவாதிகள் எந்த தேதியில் எனது நிலத்தை அனுபோகம் செய்ததை மறித்தார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்ய 10 நாட்களுக்கு முன்பு மறித்தார்கள். 1ம் பிரதிவாதி கிருஷ்ணவேணியை எனது மகன் பாரத்துக்கு முறைபடிதான் திருமணம் செய்து வைத்தேனா என்றால் ஆமாம்.

2. எனது மகன் பாரத் தற்போது எங்கு வேலை பார்க்கிறார் என்றால் 2008ல் இருந்து சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார். எனது மகனுக்கு எந்த வருடம் திருமணம் செய்து வைத்தேன் என்றால் 2023ல் திருமணம் செய்து வைத்தேன். தாவா சொத்தில் நான் சாகுபடி செய்து வந்ததற்கான எந்தவித ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து விபரங்களை வழக்குரை தயார் செய்வதற்கு நான்தான் வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்து முழுவதும் எனது பெயரில் உள்ளதா என்றால் ஆமாம், தாவா சொத்தில் ஒரு பகுதியை இரண்டு வருடங்களுக்கு முன்பு விற்பனை செய்துவிட்டேன். 3வது அயிட்ட தாவா சொத்தை 27.12.2023ல் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றில் மேற்கண்ட கிரய ஆவணத்தில் உள்ள விபரம்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட **(வில்லங்க சான்று பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனக்கு உரிமை இல்லாத சொத்திற்கு பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

4. எனது சொத்துக்கு தொடர்பாக எனக்கும், எனது மகன்களுக்கும் இடையே பாகப்பிரிவினைக்காக எங்கள் ஊரில் 04.03.2024ம் தேதியன்று பஞ்சாயத்து பேசப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் முச்சலிக்கா எழுதப்பட்டு ஆவணம் எழுதப்பட்டது என்றால் எனது விருப்பம் இல்லாமல் எழுதப்பட்டது, அசல் என்னிடம் காண்பிக்கப்படும் 04.03.2023ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தில் எனது கையெழுத்து உள்ளது என்றால் சரிதான், **(04.03.2023ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தின் நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்கண்ட நகலானது அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. பி.சா.ஆ.2 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கங்களிலும் நானும், எனது மனைவி 2ம் வாதியும் கையெழுத்திட்டோம் என்றால் சரிதான்.

5. பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தில் எனக்கும், எனது மனைவி மற்றும் எனது மகன்களுக்கும் இடையே எந்தெந்த சொத்துக்கள் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்தில் நானும், எனது மனைவி, எனது மகன்கள் அனைவரும் கையெழுத்திட்டோம் என்றால் சரிதான், எங்களை மிரட்டி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். பி.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் தாவா சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் கருவாக்குறிச்சி அவரது அம்மா வீட்டில் வசித்து வருகிறார். எத்தனை மாதங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் ஞாபகம் இல்லை.

6. எனது மூத்த மகனும், 1ம் பிரதிவாதியின் கணவருமான பாரத் 2008ல் இருந்து 2023 வரை வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை என்னிடம் கொடுத்த பணத்தைக் கொண்டு 3வது அயிட்ட தாவா சொத்தை எனது மனைவி பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட விபரங்களை கருத்தில்கொண்டுதான் தாவா சொத்துக்கள் தொடர்பாக எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

7. பி.சா.ஆ.2 ஆவணத்தில் மிரட்டி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்பது குறித்து நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை நாங்கள் கொடுமை படுத்திய சம்பந்தமாக வடுவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன்பேரில் வழக்கு பதிவு

செய்யப்பட்டது என்றால் அது பொய்யான வழக்கு என்று தீர்ப்பாகியுள்ளது. நானும், 1ம் பிரதிவாதியை வாழவிடாமல் கொடுமை படுத்தியதால் மன்னார்குடி நடுவர் நீதிமன்றம் எண்.1ல் DVC.No.37/2024 வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான், பொய் வழக்கு.

8. பி.சா.ஆ.2 ஆவணப்படி 1ம் பிரதிவாதியின் கணவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 1ம் பிரதிவாதியின் கணவரால் கட்டப்பட்ட வீட்டில் 1ம் பிரதிவாதியானவர் தனது கை குழந்தையுடன் வசித்து வருவதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளது என்றால் உள்ளது. 1ம் பிரதிவாதியையும், அவரது குழந்தையும் மேற்கண்ட வீட்டில் தங்கக்கூடாது என்று பிரச்சனை செய்து 1ம் பிரதிவாதியை அவரது அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் 1ம் பிரதிவாதியை கொடுமைபடுத்திவிட்டு தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியை எனது அனுபோகத்தை தடை செய்வதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதி கொடுத்த புகாரின்பேரில் என் மீதும், எனது மனைவி மற்றும் எனது மூத்த மகன் முத்துகிருஷ்ணன் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்த பின்னர்தான் 1ம் பிரதிவாதிக்கு தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவரால் கட்டப்பட்ட வீட்டில் 1ம் பிரதிவாதி குடியிருக்க கூடாது என்ற எண்ணத்தில் நானும், எனது மனைவியும், மூத்த மகன் ஆகியோர் குடியிருந்து கொண்டு 1ம் பிரதிவாதியை அவரது அம்மா வீட்டிற்கு அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல.

10. 2ம் பிரதிவாதி எனது மூத்த மகன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். நானும், எனது மனைவி மற்றும் மூத்த மகன் ஆகியோர் 1ம் பிரதிவாதியின் கணவரால் கட்டப்பட்ட வீட்டையும் பி.சா.ஆ.2 ஆவணப்படி 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். தவறான தகவலைக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு எதிராக தடை உத்தரவு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தற்போது 1ம் பிரதிவாதியின் கணவர் வெளிநாட்டில் உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து விவரம் தவறாக இருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.18 16:07:45 +0530

District Munsif

Mannargudi.

.